கண்டுபிடிப்புகளுக்குப் பயன்படும். அதுவும் முழு அளவுக்கு நடத்துவதற்கான வாய்ப்பும் வசதியும் இல்லை. ஏற்படுத்தப் பட்டிருக்கிற அமைப்பின்மூலம் கிடைக்கின்ற பலன்கள், உண்மைகள் வேண்டுமானால் மருத்துவத் துறையின் வாயிலாகப் பரவக்கூடும்.

சேலம் மாவட்ட மருத்துவ மனையில் சிறப்புப் பிரிவுகள்

**7 வினா—திரு. கி. ஜெயராமன் :* மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்ட அரசினர் மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit, Cancer Treatment Care Unit போன்ற சிறப்புப் பிரிவுகளைத் தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : சேலம் மாவட்ட மருத்துவ மனையில் Intensive Coronary Care Unit தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. ஆனால் Cancer Treatment Care Unit தொடங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

Metropolitan Land Bank.

*8 *Q*.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Health be pleased to state :

(*a*) whether the Seminar on Metropolitan Development Planning at its meeting around January 1975 have decided to recommend to the State Government to open a Metropolitan Land Bank; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) சென்னையில் 1975 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6, 7-ஆம் நாட்களில் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம், சென்னை-செங்கற்பட்டு வட்டார வளர்ச்சித் திட்டம் ஆகியவை குறித்து நடைபெற்ற கருத்தரங்கில் பல பரிந்துரைகள் வழங்கப் பட்டன. பெருமளவில் நிலத்தைக் கையகப்படுத்துதல், அந்நிலத்தை மேம்படுத்துதல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் பொருட்டு நில மேம்பாட்டு வங்கி ஒன்றை ஏற்படுத்த சென்னை